2017 ஜூன் 23]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியகருப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, காப்புக்காடு பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்கு, வனத் துறையில் கடுமையான சட்டம் இருப்பது உண்மைதான். ஆனாலும், உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற கொடைக்கானல் போன்ற பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் தேவையான இடங்களில் சாலைகள் இருக்கின்றன. விலங்கினங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால், வனச் சட்டத்தைக் காரணமாகக் காட்டி சாலைகள் போடப்படாமல், விலங்கினங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். எனவே, அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளின் விவரங்களை அவரது பகுதியில் இருக்கின்ற* D.F.O. *போன்ற அதிகாரிகளிடம் கோரிக்கையாக வைத்தால், அவற்றை அவர்கள் பார்வையிடச் செய்து, வாய்ப்புகள், வசதிகள் இருந்தால் உறுப்பினர் சொன்ன பகுதிகளில் சாலைகளை அமைக்க நிதியாதாரத்தை வைத்து பரிசீலனை செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு. மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

ஹாக்கி மைதானம்

*12740—திரு. அ. ராமு:

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஹாக்கி மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது, குன்னூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த ஹாக்கி மைதானம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள, தமிழக மக்களின் துயர் துடைத்த காவியத் தலைவனே! சத்துணவு தந்த சரித்திர நாயகனே! பொன்மனச் செம்மலே! பொன்விழா கண்ட ஏழைகளின் இதய தெய்வமே! 'பாரத ரத்னா' டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! உங்களைப்போல் இனி யாரும் பிறக்கப் போவதில்லை; எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்களை நாங்கள் என்றுமே மறக்கப் போவதுமில்லை. அம்மா! வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே உறங்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வமே! தாலிக்குத் தங்கம் தந்த தங்கத் தாரகையே! காவிய நாயகியே! கருணையின் பிறப்பிடமே! தமக்கென வாழா தியாகமே! ஊண் உறக்கம் மறந்து உருகுகின்ற மெழுகாய் உழைக்கும் தீபமே! ஊர் உலகு வியக்கும்வண்ணம் ஆட்சித் தேரை செலுத்தி, உழைப்பால் உயர்ந்த ராணி மகாராணியே! டாக்டர் புரட்சித் தலைவியே! அம்மா. உங்கள் மலர்ப் பாதம் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அமைத்துத் தந்த ஆட்சிப் பீடத்தைத் திறம்படச் செயலாக்கிக் கொண்டிருக்கும் கொங்கு மண்டலத்தின் எளிமையான நாயகனே! தமிழ்நாட்டு மக்களின் மனதில் இடம் பிடித்த எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்கி, நீலகிரி மாவட்டச் செயலாளர் அவர்களுக்கும், எனது அன்பார்ந்த தொகுதி மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி வணங்குகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அம்மாவின் சிறந்த அரசு, தேசிய விளையாட்டான ஹாக்கி விளையாட்டிற்கு முக்கியத்துவம் தந்திருக்கிறது. உலக அளவில் இந்தியாவின் ஹாக்கி அணி சிறப்பாக விளையாடி நமது நாட்டிற்குப் பெருமை சேர்த்திருப்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

2017 ஜூன் 23]

நீலகிரி மாவட்டத்தில் தேசிய விளையாட்டிற்குப் பெருமை சேர்க்கும்வகையில் ஹாக்கி விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து அதிகமான வீரர்கள் விளையாடி வருகிறார்கள். சுமார் 20 அணிகளுக்கு மேலாக ஓர் அணிக்கு 20 பேர் வீதம் 400 பேர் விளையாடி வருகிறார்கள். தேசிய அளவில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் ஆண்கள் பிரிவில் தமிழ்நாடு அணியில் 14 பேரும், பெண்கள் பிரிவில் 8 பேரும் பங்கு பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமு, ஊட்டியில் ஹாக்கி விளையாட்டு மைதானம் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி மட்டும் கேளுங்கள். நீங்கள் புள்ளிவிவரங்களைச் சொல்ல வேண்டாம்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், மெக்சிகோ மற்றும் ஸ்பெயின் நாடுகளைப்போல, கடல் மட்டத்திலிருந்து குன்னூர் பகுதி 6,000 அடி உயரத்தில் உள்ளதாலும், இதன் தட்பவெப்ப நிலை சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கும் அணிகள் பயிற்சி பெறுவதற்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மைதானம் அமைப்பதற்குப் பரிசீலனை செய்வதாக அறிவித்துள்ளார்கள். அரசுக்குச் சொந்தமான நிலத்தைக் கண்டறிந்து, மாவட்ட நிருவாகம் தரும்பட்சத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து ஹாக்கி மைதானம் அமைத்துத் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடத்தில் அரசு நிலமோ அல்லது நகராட்சியின் நிலமோ இல்லாத காரணத்தினாலேதான் அங்கு மைதானம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டேன். இடம் இருக்குமேயானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும். விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில்*

மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களில் இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபோதுதான், 2005 ஆம் ஆண்டில் ஆசிய அளவில் விளையாட்டுத் துறைக்காக ஒரு பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்தார். அந்தப் பெருமை இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவருக்கு மட்டும்தான் இருக்கிறதே தவிர, வேறு யாருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. 15 நாட்களுக்கு முன்பு அனைவரும் பார்த்திருக்கக்கூடும். ஏறத்தாழ 4 கோடியே 9 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விளையாட்டிலே சிறந்து விளங்குகிறவர்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில், இந்த அரசு முன்னுரிமை தரும். விளையாட்டுத் துறையில் உள்ள சிறந்த வீரர்களை இங்கிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும் பரிந்துரை செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால் இந்த அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலக அளவில் புகழ்பெற்ற மற்றும் அதிக மக்களால் விரும்பி ரசித்துப் பார்க்கும் ஆட்டம் கால் பந்தாட்டம். நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் கால்பந்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, கால்பந்தை அதிகமான வீரர்கள் விளையாடி வருகிறார்கள். கோத்தகிரி வீரர்கள், இந்தியாவின் முப்படை, காவல் துறை, வருமான வரித் துறை, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம், அருவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலை மற்றும் பல தனியார் நிறுவனங்களில் வேலை செய்து பயன்பெற்று வருகிறார்கள். தற்போது நீலகிரி மாவட்ட கால்பந்து சங்கத் தலைவராக இருப்பதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தரம் வாய்ந்த மைதானத்தை கோத்தகிரியில் அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்பந்து சங்கத்தில் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பதாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கால்பந்து விளையாட்டு மட்டுமல்ல, கைப்பந்து விளையாட்டானாலும், அதையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பொள்ளாச்சி நகராட்சிப் பகுதியிலே ஒரு விளையாட்டு அரங்கத்தை இந்த ஆண்டே அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அவருடைய சம்பந்தி ஊர் பொள்ளாச்சி ஆகும். அந்த வகையிலே, அதிகளவு* priority *கொடுத்து, இந்த ஆண்டே அதற்கான பணிகளை மேற்கொண்டு, பொள்ளாச்சி நகருக்குச் சிறப்பு சேர்ப்பார்களா என்பதனைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, என்னுடைய சம்பந்தி பொள்ளாச்சியில் இருக்கிறார் என்று கூறினார். சம்பந்தியைப் பற்றி கவலையில்லை,*

மக்களைப் பற்றி கவலைப்படுகிற அரசு இந்த அரசு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, இந்த ஆண்டே உடனடியாக அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

அனல் மின் நிலையம்

*1534—திருமதி பெ. சீத்தாபதி:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மரக்காணம் வட்டத்தில் புதிய அனல் மின் நிலையம் அமைத்து மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரக்காணம் பகுதியில் புதிய அனல் மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே 13,000 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் புதிய அனல் மின் திட்டங்கள் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதனால் மரக்காணம் பகுதியில் புதிய அனல் மின் நிலையம் அமைக்கின்ற கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை